

விழுப்புரம் மத்திய மாவட்ட செயற்குழுக் கூட்டம் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணனின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேர்தல் மண்டல பொறுப்பாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ் வரவேற்புரையாற்றினார். மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், தொகுதி பொறுப்பாளர் துரை.கி.சரவணன், எஸ்.கே.பி..கருணாநிதி, சிவ.ஜெயராஜ், துணை செயலாளர் தயா.இளந்திரையன், தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ் , ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### செங்கம் நகரில் கராத்தே பயிற்சிக்குச் சென்ற 16 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை:

# பா.ஜ.க. இளைஞரணி நிர்வாகி மீது ‘போக்சோ’ உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் வழக்கு!

## பா.ஜ.க. இளைஞரணி நிர்வாகி எழில் இசையை கைது செய்து காவல்துறை விசாரணை!

செங்கம், மே 24 -

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் நகரில் கராத்தே பயிற்சிக்கு சென்ற 16 வயது பள்ளி மாணவியை, பாலியல் வன்கொடுமை செய்த பா.ஜ.க. இளைஞரணி நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் நகரம் திருவள்ளுவர் நகர் பகுதியில் பா.ஜ.க.கிளை தலைவராகவும் நகர இளைஞரணி துணைத் தலைவராகவும் பதவி வகித்து வரும் சேட்டு என்பவரின் மகன் எழில் இசை, செங்கம் சுற்றுவட்டார பகுதிகளில் தனியார் பள்ளிகளில் கராத்தே பயிற்சி அளித்து வந்தார். மேலும் செங்கம் நகர பகுதிகளிலும் கராத்தே பயிற்சி பள்ளி நடத்தி வந்தார்.

இந்த நிலையில் மேல் புழுதியூர் ஊராட்சி சந்தகவுண்டன் புதூர் பகுதியைச் சேர்ந்த ஏழுமலை என்பவரின் 16 வயது மகள், பாஜக இளைஞரணி நிர்வாகி எழில் நடத்தி வரும் கராத்தே பள்ளியில் சுமார் 8 ஆண்டுகளாக பயிற்சி பெற்று வந்தார்.

பயிற்சி பெற்று வந்த மாணவியை பாஜக நிர்வாகி கராத்தே மாஸ்டர் பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில், மாணவி கர்ப்பமானார். இதையடுத்து, திருவண்ணாமல அரசு மருத்துவமனைக்கு சிறுமி அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், அவரை பரிசோதித்த மருத்துவர்கள், செங்கம் அனைத்து மகளிர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இந்நிலையில், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு அந்த மாணவிக்கு குழந்தை பிறந்தது. அந்த குழந்தை அரசு உதவி பெறும் தனியார் தொண்டு நிறுவனத்தில் பராமரிக்க அனுமதிக்கப்பட்ட நிலையில், மாணவி தனது பெற்றோருடன் இருந்து வந்தார்.

இந்நிலையில், டி.என்.ஏ. ஆய்வு செய்த போது பா.ஜ.க. இளைஞரணி நிர்வாகி கராத்தே மாஸ்டர் தான் குழந்தையின் தந்தை என தெரிய வந்தது. இதையடுத்து, சிறுமியிடம் அத்துமீறிய பா.ஜ.க. இளைஞரணி நிர்வாக எழில் இசை கைது செய்யப்பட்டார். அவர் மீது, போக்சோ உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறது.

### மூலிகை அழகுசாதனப் பொருட்கள் -

# தோல் பராமரிப்புப் பொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி!

சென்னை, மே 24 -

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், மூலிகை அழகுசாதனப் பொருட்கள் & தோல் பராமரிப்புப் பொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி வரும் 28.05.2025 முதல் 30.05.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் தேங்காய் எண்ணெய் சோப்பு, மூலிகை சோப்பு, ஆயுர் வேத சோப்பு, முடி வளரும் எண்ணெய், முடி வளரும் ஷாம்பு, ஃபேஸ் வாஷ் ஜெல், கை கழுவும் திரவம் மற்றும் பயிற்சி வழிமுறைகளுடன் சுயமாக தொழில் தொடங்குவதற்கு இந்த பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ளவர்கள் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

சென்னையில் பங்குபெறும் ஆண், பெண் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலை தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத் தாங்கல், சென்னை - 600032. 8668102600.

### தி.மு.க மாணவர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க மாணவர் அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் பாண்டிச்சேரி மாநில அமைப்பாளர் ஆலோசனைக்கூட்டம் வருகிற 26.05.2025 திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் **சென்னை ஆர்.கே.சாலையில் அமைந்துள்ள, “ஓட்டல் உட்லண்ட்ஸ்”ல்**, கழகத் துணைப் பொதுச்செயலாளரும் - மாணவர் அணியின் பொறுப்பாளருமாகிய ஆ.இராசா எம்.பி அவர்களின் தலைமையில் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில் குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றிட நடைபெறும் அனைத்து மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் பாண்டிச்சேரி மாநில அமைப்பாளர் மட்டும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சிகள், மாணவரணியின் ஆக்கப் பணிகள் குறித்த ஆலோசனை

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 23.5.2025

இரா.ராஜீவ்காந்தி
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



புது டெல்லியில் நடந்த தேர்தல் சம்பந்தமான தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில அனைத்துக் கட்சிகளின் பயிற்சி முகாமில் புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நெல்லித்தோப்பு தொகுதி செயலாளர் செ. நடராஜன் மற்றும் காரைக்கால் தி.மு.க. சார்பாக குலாம் ஆகியோர் கலந்துகொண்டு தேர்தல் அதிகாரிகளிடம் சான்றிதழ் பெற்றனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மாவட்டங்களுக்கு 3 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**24/05/2025 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | அரசு திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை. |
| காலை 11:30 மணி | வீட்டுமனைப் பட்டா மற்றும் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்ட அரசாணை வழங்குதல் | ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை. |
| மதியம் 12:30 மணி | புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் | கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு. |
| மாலை 04:00 மணி | ‘மிசா’ துரை மாணிக்கம் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி | ஏ.என்.எஸ்.பிரைட் ஹோட்டல் மினி ஹால், புதுக்கோட்டை. |
| மாலை 04:30 மணி | மகளிர் சுய உதவிக் குழுவினருடன் சந்திப்பு | 9-ஏ, நத்தம் பண்ணை, புதுக்கோட்டை. |
| மாலை 05:30 மணி | கழக மருத்துவ அணி மாநில கருத்தரங்கம் | பள்ளத்துவயல், திருச்சி பைபாஸ் சாலை, புதுக்கோட்டை. |
| மாலை 06:30 மணி | திருநங்கைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | கல்லுக்குமியல்பட்டி, இளையாவயல், புதுக்கோட்டை. |

**25/05/2025 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 09:30 மணி | கழக இளைஞர் அணி மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | கோர்ட் யார்டு ஹோட்டல், திருச்சி. |
| மதியம் 12:30 மணி | ஆர்.சிவராம் பிரசாத் - ஏ.காவ்யா இணையரின் திருமண வரவேற்பு விழா | ஸ்ரீ காமாட்சி மஹால், வேலாயுதம்பாளையம், கரூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-05-2025



### கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணை தீவிரம்:

# வழக்கில் தொடர்புடைய ரமேஷ் - சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் ஆஜர்!

## விசாரணைக்கு ஆஜரான ரமேஷ் – உயிரிழந்த கனகராஜின் உறவினர்!

கோவை, மே 24 -

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில், கார் விபத்தில் உயிரிழந்த கனகராஜின் சகோதரர் ரமேஷ், விசாரணைக்காக சி.பி. சி.ஐ.டி. அலுவலகத்தில் ஆஜரானார்.

நீலகிரி மாவட்டம் கொடநாட்டில், மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலிதாவுக்கு சொந்தமான பங்களாவில், கடந்த 2017ம் ஆண்டு நுழைந்த கும்பல், பாதுகாப்புப் பணியில் இருந்த காவலாளி ஓம் பகதூரை கொலை செய்துவிட்டு சொத்து ஆவணங்களை கொள்ளையடித்துச் சென்றது.

இந்த சம்பவத்தில் விசாரணை வளையத்திற்குள் கொண்டு வரப்பட்ட ஜெயலிதாவின் கார் ஓட்டுநர் கனகராஜ், மர்மமான முறையில் விபத்தில் உயிரிழந்தார். இந்த வழக்கில் தடயங்களை அழித்ததாக கனகராஜின் உறவினர்களான தனபால், ரமேஷ் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஜாமினில் வெளியே உள்ளனர்.

இந்த நிலையில் விசாரணைக்கு ஆஜராக கனகராஜின் உறவினர் ரமேஷுக்கு சி.பி.சி.ஐ.டி. போலீசார் சம்மன் அனுப்பிய நிலையில், அவர் விசாரணைக்காக சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் ஆஜராகியுள்ளார்.

### ஏழை மாணவர்களுக்கான 25 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கான

# நிதியை தமிழ்நாட்டிற்கு ஒதுக்காதது ஏன்?

## விவரங்களைத் தாக்கல் செய்ய – ஒன்றிய அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, மே 24 -

கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ், தமிழ்நாட்டுக்கு ஒதுக்க வேண் டிய நிதி குறித்த விவரங்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கட்டாய கல்வி உரிமை சட்டத்தின்படி தனியார் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கு 25 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஆனால் 2025ஆம் ஆண்டுக்கு இந்த இட ஒதுக்கீட்டின் கீழ் இன்னும் மாணவர் சேர்க்கை தொடங்கப்படவில்லை என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

கோவையைச் சேர்ந்த மறுமலர்ச்சி இயக்கம் என்ற அமைப்பின் நிர்வாகி வே.ஈஸ்வரன் இவ்வழக்கை தொடர்ந்தார்.

அவர் தனது மனுவில், “உடனடியாக மாணவர் சேர்க்கையை தொடங்க தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட வேண்டும்” என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி ஆர் சுவாமிநாதன் மற்றும் வி. லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வில் நேற்று (மே 22) விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழ்நாடு அரசு தரப்பில் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன் ஆஜராகி, “கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் 25 % இட ஒதுக்கீட்டு மாணவர்களுக்கான கல்வி கட்டணத்தில் 60 சதவிகித தொகையை ஒன்றிய அரசும் 40 சதவிகித தொகையை மாநில அரசும் வழங்க வேண்டும். ஆனால் கடந்த 2021முதல் எந்த நிதியையும் ஒன்றிய அரசு ஒதுக்கவில்லை. 100 சதவிகித தொகையை மாநில அரசு தான் வழங்கி வருகிறது. ஒன்றிய அரசு நிதி ஒதுக்காவிட்டால் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து முடிவெடுக்க மே 28ஆம் தேதி தமிழ்நாடு அரசு ஒரு கூட்டத்தை நடத்தவுள்ளது” என்று வாதத்தை முன் வைத்தார்.

ஒன்றிய அரசு நிதி ஒதுக்காததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதையும் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன் சுட்டிக்காட்டி னார்.

இதையடுத்து நீதிபதிகள், ஒன்றிய அரசு ஏன் நிதி ஒதுக்கவில்லை என்று கேள்வி எழுப்பினர்.

இதற்கு ஒன்றிய அரசு தரப்பு வழக்கறிஞர் பாபு, அனைத்து மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டு வருவதாகவும் சில காரணங்களால் தமிழ்நாட்டுக்கு நிதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

என்ன காரணத்துக்காக நிதி ஒதுக்கப்படவில்லை என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன், ஒன்றியத்தில் ஆளும் கட்சிக்கு தமிழகத்தில் ஒரு எம்பி கூட இல்லை என்பதால் ஒதுக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து, கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ், 25 சதவிகித இட ஒதுக்கீட்டு இடங்களுக்கு தமிழ்நாட்டுக்கு ஒதுக்க வேண்டிய நிதி விவரங்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை நீதிபதி கள் ஒத்திவைத்தனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம், அரசூர் கிராமத்தைச் சேர்ந்த மூன்று பேர் 21.05.2025 அன்று மலட்டாற்றில் நீரில் மூழ்கி உயிரிழந்தனர், அவர்களது குடும்பத்திற்கு ஆறுதல் கூறி முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து தலா ரூ.3 லட்சம் நிவாரண உதவி வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டார், அதன் பெயரில் நேற்று முன்தினம் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ நேரில் சென்று உயிரிழந்தவர்களின் பெற்றோர்களுக்கு ஆறுதல் கூறி தலா ரூ.3 லட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார், அப்போது அவருடன் வருவாய் வட்டாட்சியர் செந்தில்குமார், திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், மாவட்ட கவுன்சிலர் மா.சந்திரசேகரன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உட்பட பலர் உடன் இருந்தனர்.